## ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவகம் - 2013

ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசோட்டக் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவு, 108 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த அறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக் கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றைத் தீர்மானித்தல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். என்னால் உயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு (ISSAI 1000-1810) அமைய இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது

கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்றன என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கும் கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடைமுறைகள் கணக்காய்வில் உள்ளடங்கும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய போதியளவு தவறான கூற்றுக்களினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காகவல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. கணக்காய்வு நோக்கெல்லையையும் அளவையும் தீர்மானிப்பதற்கு 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவினது (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தற்றுணிவு அதிகாரத்தை வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவகத்தின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம்**

பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 7 இற்கு இணங்க சொத்துக்கள் நியாயப் பெறுமதியில் அறிக்கையிடப்பட வேண்டியிருந்த போதிலும் தற்போது பாவனைக்கு எடுக்கப்படுகின்ற முழுமையாகப் பெறுமானத் தேய்விடப்பட்ட கிரயம் ரூபா 65,873,657 பெறுமதியான நடைமுறையல்லாச் சொத்துக்கள் மீள் கணிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்குக் கொண்டுவருவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 133,280 பெறுமதியான நிழற்படப் பிரதி இயந்திரத்தைக் கொள்வனவு செய்யும் போது அதற்காக நிறுவனத்திற்குச் சொந்தமான

நிழற்படப் பிரதி இயந்திரத்தை ரூபா 20,000 தொகைக்கு பரிமாற்றப்பட்டிருந்த போதும் தேறிய வேறுபாடு மாத்திரம் கணக்கு வைக்கப்பட்டமை.

(ஆ) ஊழியர்களுக்கு விற்பனை செய்யப்பட்ட 39 நிலையான சொத்து விடயங்கள் கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது பெறப்பட்ட தொகையான ரூபா 113,050 மாத்திரம் வருமானமாகக் கணக்கு வைத்தமை.

### 2.2.3 நீண்ட காலமாக இணக்கஞ் செய்யப்படாத மீதி

நீண்ட காலம் தொடக்கம் தீர்க்கப்படாத சர்வதேசக் கிளையிலிருந்து கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகள் முறையே ரூபா 2,911,912 தொகை மற்றும் ரூபா 11,603,217 தொகைகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான பட்டோலைகள் இன்மையின் காரணமாக தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 751 மற்றும் 756 | பொருளிருப்புப் பதிவேடு பேணப்படாதிருந்ததுடன் பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. |

| | |
|---|---|
| (ஆ) 2013 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றிநிருபத்தின் 9.7 ஆம் பிரிவு | பல்கலைக்கழக முறைமையில் பயன்படுத்தப்படுகின்ற சம்பளம் மற்றும் படிகளுக்குப் புறம்பாக பல்வேறு பகுதிகளுக்காக ஒப்பந்த அடிப்படையில் 08 ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக திறைசேரிச் செயலாளரின் அங்கீகாரமின்றி சம்பளம், படிகள் மற்றும் சம்பள அதிகரிப்பு என்பன வழங்கப்பட்டிருந்தன. |
| (ஆ) 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றுநிருபம் | நிலையாக சொத்துப்பதிவேடு பேணப்பட்டிருக்க வில்லை. |

## 2.4 போதியளவான அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

2013 ஆம் ஆண்டின் போது 08 பயிற்சி பாடநெறிகள் நடாத்தப்பட்டிருந்ததுடன் அதில் தேறிய மிகையான ரூபா 9,031,575 தொகையில் ரூபா 7,036,900 தொகை முறையான அங்கீகாரமின்றி பதவியணியினருக்கிடையே பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது நிறுவகத்தின் வேலை நடவடிக்கைகளின் நிதி விளைவு ரூபா 40,784,288 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 41,736,535 ஆக இருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளின் வீழ்ச்சி ரூபா 952,247 ஆகக் காணப்பட்டது.

**3.2 நிறுவகத்திற்கு எதிராக அல்லது நிறுவகத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட விடயங்கள்**

நிறுவகத்தினால் முன்னாள் பணிப்பாளரினால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 50 மில்லியன் அளவிலான நிதி மோசடியை அறவிடுவதற்காக வழக்குத் தொடரப்பட்டிருந்ததுடன் முன்னாள் காசாளரினால் நிறுவகத்திற்கு எதிராக ரூபா 30 மில்லியன் நட்டஈடு கோரி வழக்குத் தொடுக்கப்பட்டிருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றல்**

மீளாய்வாண்டின் போது முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்தில் பதிவு செய்த மாணவர்களின் எண்ணிக்கை 281 ஆகும். நிறுவகம் 5 பட்டப்பின்படிப்பு பாடநெறிகளுக்குரிய 419 மாணவர்களுக்கு 2013 ஆம் ஆண்டின் போது பட்டம் வழங்கியிருந்தது.

**4.2 முகாமைத்துவ செயற்திறமையீனங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) புரபெசனல் மெனேஜர் மற்றும் ஸ்ரீலங்கா ஜர்னல் ஒப் மெனேஜ்மென்ட் நாளிதழ்களை விற்பனை செய்வதற்காக மீளாய்வாண்டின் போது பத்திரிகை விளம்பரங்களை பிரசுரிப்பதற்காக ரூபா 536,004 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் எவ்வித நாளிதழ்களும் வெளித்தரப்பினர்களினால் கொள்வனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிறுவகத்தினால் திறைசேரி அங்கீகாரமின்றி ரூபா 350,000 தொகை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக விஞ்ஞான பீடம் மற்றும் முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகம் என்பவற்றின் பழைய மாணவர் சங்கங்களுக்கு மானியமாக வழங்கப்பட்டிருந்தது.

(இ) நிறுவகத்தில் பேணப்படுகின்ற முகாமைத்துவ நலன்புரிச் சங்கங்கத்திற்கு திறைசேரி அங்கீகாரமின்றி மீளாய்வாண்டின் போது நிறுவகத்தின் நிதியத்திலிருந்து ரூபா 2,600,000 தொகை மாற்றப்பட்டு அத்தொகையிலிருந்து ரூபா 1,964,925 தொகை பதவியணியினருக்கு உணவுப் படியாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) 2012 ஆம் ஆண்டின் போது தனியார் கம்பனிக்கு சொத்துக்கள் முகாமைத்துவம் தொடர்பான மென்பொருள் முறைமையொன்று தயாரிப்பதற்காக ரூபா 250,000 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் உரிய செயற்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

## 4.3 இனங்காணப்பட்ட நட்டம்

வெளியிடப்பட்ட இருப்பு தொடர்பாக கணக்காய்வின் போது மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 368,679 பெறுமதியான 547 புத்தகங்களின் பற்றாக்குறை அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் முகாமைத்துவப் பட்டப்பின்படிப்பு நிறுவகப் பணிப்பாளரின் கவனத்திற்குக் காலத்திற்குக் காலம் கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) நிலையான சொத்து நிர்வாகம்
(ஆ) இருப்புக் கட்டுப்பாடு
(இ) ஆளணி முகாமைத்துவம்